Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 21, 2022

திங்கட்கிழமை மார்ச் 21, 2022 | ஒளி: 07 கதிர்: 261 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## சதமடித்தது பால் தேநீர் விலை

பால்மா விலையை அதிகரிக்க பால்மா இறக்குமதியாளர்கள் தீர்மானித்தமைக்கு அமைய, ஒரு கோப்பை பால் தேநீரின் விலையை 100 ரூபாயாக அதிகரிக்க அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2







போராட்டத்துக்கு வந்தவர்களை பஸ்ஸுக்குள் தடுத்து வைத்த பொலிஸார்

## வீதியில் அழுது புரண்டு உறவுகள் போராட்டம்

■ எம்.றொசாந்த், வி. நிதர்ஷன்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்துவதற்காக, முல்லைத்தீவிலிருந்து பஸ்ஸில் வந்த மக்களை இறங்கவிடாது, பஸ்ஸிலேயே தடுத்து வைத்து, பஸ் சாரதியை பொலிஸார் தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர்.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர், மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை நேற்று (20) திறந்து வைக்க ஏற்பாடாகியிருந்தது.

குறித்த நிகழ்வு நடைபெறும் இடத்தில், பிரதமரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொள்வதற்காக, முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பஸ்ஸில் வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை, மட்டுவில் அம்மன் கோவிலுக்கு அருகில் பொலிஸார் வழிமறித்தனர். பஸ்ஸில் இருந்து எவரையும் இறங்க விடாதவாறு, பஸ்ஸின் இரு கதவுகளிலும் பொலிஸார் காவலுக்கு நின்ற நிலையில், சாரதியை கடுமையான விசாரணைக்கு உட்படுத்தினர்.

அதேவேளை, பொலிஸாரின் காவலையும் மீறி, பஸ்ஸில் இருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், வீதியில் அழுது புரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



## உள்ளூர் பால்மா ரூ.105 ஆல் அதிகரிப்பு

உள்ளூர் பால் மாவின் விலை 105 ரூபாவால், உடன் அமலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

520 ரூபாய்க்கு இருந்த 400 கிராம் பெலவத்த பால்மா பக்கெட், 105 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் பால்மாவின் விலையும் 625 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் ஓர் இனப்பிரச்சினை இருப்பதை

## ஜனாதிபதி ஒத்துக்கொள்ள வேண்டும்

### சமிக்ஞை கிடைக்காதவரை பேச்சு வார்த்தை இல்லை என்கிறார் அடைக்கலநாதன் எம்.பி

■ வா.கிருஸ்ணா



ஜனாதிபதி முதலில் இந்த நாட்டில் ஓர் இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதனை அவர் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்று தெரிவித்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவரும் வன்னி மாவட்ட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஜனாதிபதியின் சமிக்ஞை கிடைக்காதவரையில் நாங்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளப்போவதில்லையென தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சபுகஸ்கந்தைக்கு மீண்டும் மூடுவிழா

முழுச் செய்தி P3



நல்லூர் கந்தனிடம் செல்லாது மாவிட்டபுரம் சென்றார்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு


## யாழில் கடும் எதிர்ப்பு

■ எம்.றொசாந்த், வி. நிதர்ஷன்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட கடும் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஜயம் இரத்துச் செய்யப்பட்டதையடுத்து, நேற்று (20) காலை 9.30 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்ற பிரதமர், அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தொடர்ச்சி P2





சர்வகட்சி மாநாட்டில்

## கலந்து கொள்கிறது கூட்டமைப்பு

### வாசு, விமல், கம்மன்பில, அநுர புறக்கணிக்கத் தீர்மானம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் மார்ச் மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில்

## 129ஆவது இடத்தை பெற்றது இலங்கை

உலகளாவிய ரீதியில் 149 நாடுகளைக் கொண்ட, உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இலங்கை 129ஆவது இடத்திலுள்ளது.

தொடர்ச்சி P2

## வானில் மாணவன் கடத்தல்

■ சண்முகம் தவசீலன்

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற வள்ளிபுனத்தைச் சேர்ந்த மாணவன், வானில் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பி வந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சர்வதேச அலைபேசி கட்டணமும் உயர்கிறது



சர்வதேச அலைபேசி அழைப்புகளுக்கான கட்டணத்தை அதிகரிப்பதற்கு தொலைபேசி நிறுவனங்கள் அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எரிவாயு விலைகளை அதிகரித்தது லாஃப்ஸ்



அமெரிக்க டொலருக்கான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததையடுத்து, லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பிரதித் தலைவர் திலக் டி சில்வா, நேற்று (20) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சர்வகட்சி மாநாட்டு தினத்தன்று

## கொழும்பில் எதிர்ப்பு பேரணி

ஜனாபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை (23) சர்வகட்சி மாநாடு இடம்பெறவுள்ள நிலையில், தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி, பேரணியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு தெல்கந்த சந்தியில் பாரிய எதிர்ப்பு பேரணியொன்று ஆரம்பிக்கப்பட உள்ளதுடன், அதனைத் தொடர்ந்து நுகேகொடையில் பேரணியொன்று நடத்தப்படும் என, கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க, நேற்று (20) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கொல்கிறது வரிசை: மற்றுமொருவர் மரணம்

கடவத்தையில் எரிபொருள் வரிசையில் நின்று கொண்டிருந்த போது, மயங்கி விழுந்த மற்றுமொரு வயோதிபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று (20) உயிரிழந்துள்ளார் என கடவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மாகொல பிரதேசத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான 70 வயதுடைய நபரே ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## திரவப்பாலை ஊக்குவிக்க அரசாங்கம் உத்தேசம்

### 5,000 பசுக்கள் வரும் என்கிறார் மஹிந்தாணந்த

திரவ பாலை பிரபலப்படுத்துவதற்காக பாரிய அளவிலான பாற்பண்ணைகளை நிறுவுவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்று தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பஸ்ஸுக்குள் தடுத்து வைத்த பொலிஸார்

இதனால் அப்பகுதியில் பெரும் பதட்ட நிலைமை ஏற்பட்டது. மேலும், மத்திய நிலைய பகுதியில் பெருமளவான பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

## ஜனாதிபதி ஒத்துக்கொள்ள...

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி, கூட்டமைப்பினை அழைத்ததையொட்டி ஏற்கெனவே நாங்கள் சம்பந்தன் ஐயாவுக்கு ஒரு கடிதத்தினை அனுப்பியிருந்தோம். அது தொடர்பில் எமது கட்சியின் தலைமைக்குழு சனிக்கிழமை (19) மட்டக்களப்பில் கூடி சில தீர்மானங்களை எடுத்திருந்தது. எங்கள் கட்சியின் தலைவர் ஸ்ரீசபாரெத்தினம் மற்றையது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோரின் சிந்தனை, இந்த நேரத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று நாங்கள் சிந்தித்துப் பார்த்தோம். அந்த அடிப்படையிலே அவர்கள் இருந்திருந்தால் நிச்சயமாக இந்தப் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதித்திருப்பார்கள். அந்த நிபந்தனை என்பது நல்லிணக்க அடிப்படையிலே சில விடயங்களை ஜனாதிபதி செய்ய வேண்டும் என்று நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

ஜனாதிபதி, இன்றுவரைக்கும் போரை நடத்தி முடித்தவர் என்ற பெருமிதத்தோடும் இறுமாப்போடும் சிங்கள மக்களின் வாக்குகளால் வந்தவர் என்கின்ற இனத்துவேசத்தோடும், இனப்பிரச்சினை இந்த நாட்டிலே இல்லை பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம் தான் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டு இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை பேச்சுக்கு அழைக்கின்றார்.

**இந்த நிலத்துக்காகவே பல்லாயிரக் கணக்கானவர்கள் போராட்டத்திலே மடிந்திருக்கின்றார்கள். அவர்களின் போராட்டம் மலினப்படுத்தப்பட்டுவிடக் கூடாது. எனவே எமது நிலத்தைத் தக்க வைத்து, அடுத்த சந்ததி வாழ வேண்டும் என்று நினைத்த, போராளிகளின் சிந்தனையை நாங்கள் சுமந்து செல்ல வேண்டும்**

வடக்கு, கிழக்கிலே இந்த அரசாங்கம் காணிகளைச் சூறையாடுகின்றது; புத்த சிலைகளை வைக்கின்றது; காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு விலைபேசுகின்றது. களவு, கற்பழிப்பு செய்தவர்களை பொதுமன்னிப்பு என்ற ரீதியில் விடுதலை செய்கின்ற இந்த அரசாங்கம், 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகள் சம்மந்தமாக எந்தவோர் அக்கறையும் கொள்ளவில்லை.

இதற்குப் பின்னும் நாங்கள் இந்த ஜனாதிபதியோடு பேச வேண்டுமா? ஆகவே, நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம். ஜனாதிபதி முதலில் இந்த நாட்டில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதனை அவர் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

நேற்றைய தினம் கூட யாழ்ப்பாணத்தில் புத்தர் சிலை நிறுவுகின்ற செயற்பாடு நடைபெற்றது. இவ்வாறாக இந்த அரசாங்கம் இக்கட்டான நிலைமையில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே, நாங்கள் இந்த அரசைக் காப்பாற்றுகின்ற செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது.

காணாமல் போனவர்களுக்கு விலைபேசாமல், அவர்களை ஒப்படைத்தவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்கப்பட வேண்டும். உண்மை தெரியப்படுத்தப்பட வேண்டும். அதற்குப் பதிலாக காசு தருவதாகச் சொல்வது ஏற்புடையதல்ல.

எமது இருப்பைக் கேள்விக்குறியாக்கக் கூடிய விதத்தில் எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. நிலம் இருந்தால் தான் அந்த இனம் செறிந்து வாழ முடியும். இந்த அரசாங்கத்தின் சிந்தனையின்படி ஓர் இனத்தின் நிலங்களை அபகரித்தால், அந்த இனத்தின் வாழ்வு கேள்விக்குறியாகும்.

அந்த வகையிலேயே மகாவலி, வனப் பாதுகாப்பு, பறவைகள் சரணாலயம், தொல்பொருள் திணைக்களம் என்ற திணைக்களங்கள் ஊடாக, எமது பூர்வீகத்தை இல்லாதொழித்து, இந்த நாட்டிலே வடக்கு, கிழக்கிலே பெரும்பான்மை இனம்

**எங்கள் கட்சியின் தலைவர் ஸ்ரீசபாரெத்தினம், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோரின் சிந்தனை, இந்த நேரத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தோம். அந்த அடிப்படையில் அவர்கள் நிச்சயமாக இந்தப் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதித்திருப்பார்கள்**

சார்பாக பிரதிநிதித்துவம் வர வேண்டும் என்ற திட்டத்தோடு செயற்படுகின்றார்கள்.

எமது நிலம் எமக்கு முக்கியம். இந்த நிலத்துக்காகவே பல்லாயிரக்கணக்கானவர்கள் போராட்டத்திலே மடிந்திருக்கின்றார்கள். அவர்களின் போராட்டம் மலினப்படுத்தப்பட்டுவிடக் கூடாது.

எனவே எமது நிலத்தைத் தக்க வைத்து, அடுத்த சந்ததி வாழ வேண்டும் என்று நினைத்த பொதுமக்கள், போராளிகளின் சிந்தனையை நாங்கள் சுமந்து செல்ல வேண்டும்.

அந்த வகையிலே இந்த நிலத்தை அபகரிக்கும் நிலைமைகளை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும். அதற்கான சமிக்ஞையைக் காட்ட வேண்டும்.

மத ரீதயாக புத்த சிலைகளை வைக்கின்ற முறைமையை நிறுத்த வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் ஆதி காலத்தில் தமிழர்கள் புத்த மதத்தைத் தழுவி இருந்தார்களே தவிர, சிங்களவர்கள் அங்கு வாழவில்லை. பௌத்த மதம் என்பது சிங்களவர்களுக்கு உரித்தான மதம் அல்ல. அது பொதுவானது.

தற்போது தொல்பொருள் ஆராய்ச்சி என்று வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் எங்கள் மக்களின் வரலாற்று நிலைப்பாட்டைக் கொண்டுள்ள இடங்களிலே சிங்கள ஆதிக்கத்தைச் செலுத்தி, இந்த வரலாற்று இடங்களெல்லாம் சிங்கள தேசத்துக்குச் சொந்தமானது என்று சொல்லுகின்ற வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தான் எங்கள் கோரிக்கை இருக்கின்றது.

எனவே எங்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நாடுகளினுடைய ஒட்டுமொத்தமான அழுத்தத்தைக் குறைப்பதற்காக தொடர்ந்து நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்ற வாய்ப்பினை ஜனாதிபதி பெறப்போகின்றார்.

அவர் இனப்பிரச்சினை தொடர்பில் பேசப் போகின்றாரா? அல்லது பொருளாதார ரீதியில் பேசப்போகின்றாரா? எதை வைத்துக் கொண்டு அவர் பேச்சுக்கு அழைக்கின்றார் என்ற விடயம் ஜனாதிபதி செயலக நிகழ்ச்சி நிரலில் கூடச் சொல்லப்படவில்லை" என்றார்.

## சதமடித்தது பால் தேநீர் விலை

எரிவாயு, சீனி, தேயிலை தூள் போன்றவற்றின் விலை அதிகரிப்பை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், நேற்று (20) தெரிவித்தார்.

200 மில்லி லீற்றர் பால் தேநீரில் 15 கிராம் பால்மா இருக்கும் என்றும் தற்போதைய சூழ்நிலையில் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

உணவக உரிமையாளர்கள் வாடிக்கையாளர்களை இழக்க விரும்பவில்லை என்றும், செறிவில்லாத தேநீரை வழங்குவதை விட, சத்தான தேநீர் வழங்கப்படுவதை உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானத்தை உணவகங்கள், கடை உரிமையாளர்களிடம் தெரிவித்ததாகவும், 50 மில்லி லீற்றர் பால் தேநீரை 60 முதல் 70 ரூபாய்க்கு விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறு அவர்களை எச்சரித்ததாகவும் தெரிவித்தார்.

எரிவாயு சிலிண்டர் ரூ.2,670 ஆக இருந்த போது கடை உரிமையாளர்கள் 5,000 ரூபாய் என்ற கறுப்புச் சந்தை விலையில் சிலிண்டர்களை வாங்குவதாக சுட்டிக்காட்டினார்.

மேலும், ஒரு கிலோ கிராம் சீனி 190 ரூபாய் என்றும், ஒரு கிலோ கிராம் தேயிலைத் தூள் 1,200 ரூபாய் முதல் 1,300 ரூபாய் வரை உள்ளதாகவும் அத்துடன், தொழிலாளர்களின் சம்பளமும் வழங்கப்பட வேண்டும்.

பால்மா மற்றும் இதர பொருட்களின் விலை குறையும் பட்சத்தில், ஒரு கோப்பை பால் தேநீரின் விலை குறையும் என்று மேலும் தெரிவித்தார்.

## 129ஆவது இடத்தை பெற்றது இலங்கை

கடந்த பட்டியலில் 130 ஆவது இடத்தில் இருந்து இலங்கை முன்னேறியிருந்தாலும் பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவுகள், நேபாளம் போன்ற சக பிராந்திய நாடுகளுக்கு பின்னால் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சமீபத்திய உலக மகிழ்ச்சி அறிக்கை வெள்ளிக்கிழமை (18) வெளியிடப்பட்டிருந்தது. அதில், 2018-2020 வரையிலான மூன்று வருட காலப்பகுதியில் இலங்கை 129 ஆவது இடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆயுட்காலம், தாராள மனப்பான்மை, சமூக ஆதரவு, சுதந்திரம், ஊழல் ஆகியவற்றைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் 149 நாடுகளை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்து அறிக்கையை வெளியிடுகின்றனர்.

அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தான் 149 ஆவது இடத்தில் மகிழ்ச்சியற்ற நாடாகவும், பின்லாந்து உலகின் மகிழ்ச்சியான நாடாகவும் முதலிடத்தில் உள்ளதுடன், டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து ஆகியவை முறையே அடுத்த இடங்களில் உள்ளன.

## கொல்கிறது வரிசை: மற்றுமொருவர் மரணம்

இதேவேளை, கண்டி வத்தேகம, உடதலவின்ன பகுதியை சேர்ந்த 71 வயதானவர், மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த போது, மயங்கி விழுந்து நேற்று முன்தினம் (19) உயிரிழந்திருந்தார்.

கண்டியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த போது மயங்கி விழுந்தவரை, வைத்தியசாலையில் அனுமதித்த போதும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழில் கடும் எதிர்ப்பு

முன்னதாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஜயத்தை முன்னிட்டு, நல்லூர் கோவில் சூழலில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், வீதிகளும் மூடப்பட்டிருந்தன.

கோவிலுக்குச் செல்லும் பிரதான வீதிகளான பருத்தித்துறை வீதி, கோவில் வீதி என்பன பொலிஸாரால் மூடப்பட்டு, மாற்றுப்பாதை ஊடாக பொதுமக்கள் அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில், நல்லூருக்கான பிரதமரின் விஜயம் இரத்து செய்யப்பட்டதை அடுத்து பாதுகாப்புத் தரப்பினர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

இதேவேளை, பிரதமரை வரவேற்கும் முகமாக யாழில் கட்டப்பட்டிருந்த பதாதைகளை கிழித்து, தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பையும் ஆற்றாமையையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வெளிப்படுத்தினர்.

மேலும், நல்லூர் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்கள் முன்பாக பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கலந்து கொள்கிறது கூட்டமைப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் தனித்தனியே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு மாநாட்டுக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை என, அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அரசியல் நெருக்கடியை தீர்க்கக் கூட்டப்படும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

இதேவேளை, மாநாட்டைப் புறக்கணிக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி மாநாட்டுக்கு அரசாங்கத்தின் பத்து பங்காளிக் கட்சிகளில் இருந்து இரண்டு பிரதிநிதிகளை மாத்திரம் அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தின தேரர், பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் தெரியவருவதுடன், சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலோ, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலோ, அமைச்சரவையிலோ விவாதிக்காமல், சர்வகட்சி மாநாட்டை கூட்டுவது பொய் என்றும் பங்காளிக் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் அரசாங்கத்தின் மீது பழி சுமத்தும் இந்தத் தருணத்தில், அந்தக் கண்டனத்தை பகிர்ந்து கொள்வதற்காக, சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## எரிவாயு விலைகளை அதிகரித்தது லாஃப்ஸ்

அதன்படி, 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,359 ரூபாயால் அதிகரித்து 4,199 ரூபாயாகவும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 544 ரூபாயால் அதிகரித்து 1,680 ரூபாயாகவும் 2 கிலோ கிலோகிராம் சிலிண்டரின் விலை 672 ரூபாயாகவும் விலையுயர்த்தப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் வீழ்ச்சியால் 1 பில்லியன் ரூபாய் இழப்பை நிறுவனம் சந்தித்துள்ளதாகத் தெரிவித்த அவர், விலைக் கட்டுப்பாட்டால் கடந்த மூன்று ஆண்டுகளில் 5 பில்லியன் ரூபாய் இழப்பை லாஃப்ஸ் நிறுவனம் சந்தித்துள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் அமல்படுத்தப்பட்ட பால்மா, எரிவாயு, கோதுமை மா, சீமெந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகளை நீக்க அரசாங்கம் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

உலக சந்தை மற்றும் டொலரின் மாற்று விகிதங்களுடன் ஒப்பிடுகையில் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவற்றின் விநியோகத்தையும் நிறுவனத்தையும் பராமரிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## திரவப்பாலை ஊக்குவிக்க அரசாங்கம் உத்தேசம்

அடுத்த வருடத்துக்குள் 5,000 கறவை மாடுகளை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைக் குறிப்பிட்ட அமைச்சர், அங்கு மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பாரிய அளவிலான பாற்பண்ணைகள் உருவாக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கையில் இவ்வாறான திட்டங்கள் ஒருபோதும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முதற்கட்டமாக ஐந்து நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. குறித்த நிறுவனங்களுக்கு உரிய நிலப்பரப்பு வழங்கப்படும். இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் திட்டத்தில் ஈடுபடவுள்ள வர்த்தகர்கள் இத்திட்டத்தில் பெரும் தொகையை முதலீடு செய்வார்கள்.

பால் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைய வேண்டும் எனத் தெரிவித்த விவசாய அமைச்சர், திரவப் பால் பாவனையை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## வானில் மாணவன் கடத்தல்

இவர் கடத்தி செல்லப்பட்ட வானுக்குள் மேலும் இரு சிறுவர்கள் கை,கால், கட்டப்பட்டு, வாய்க்கு பிளாஸ்ரர் ஒட்டப்பட்ட நிலையில் இருந்ததாக தப்பித்த மாணவன் தகவல் தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவன் வனப்பகுதி ஒன்றுக்கு கொண்டு செல்ல முற்பட்ட போது, வானில் இருந்து தப்பியோடிய நிலையில், அடிகாயங்களுடன் உறவினர் மீட்டு, புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச அலைபேசி கட்டணமும் உயர்கிறது

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில், ரூபாயின் பெறுமதி 30 வீதத்தினால் வீழ்ச்சியடைந்த நிலையில் சர்வதேச அழைப்புகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

எவ்வாறாயினும், உள்நாட்டு அழைப்புகளுக்கான கட்டணங்கள் அல்லது இணையத்தள பாவனைக்கான கட்டணங்களை உயர்த்துவதற்கு இதுவரை எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இலங்கையின் முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனமொன்று, சர்வதேச அழைப்பு மற்றும் குறுஞ்செய்தி கட்டணங்களை சனிக்கிழமை (26) முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கான ரூபாய் மதிப்பு சரிந்ததன் விளைவாக, இந்தக் கட்டண அதிகரிப்பு இடம்பெறவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் எதிர்ப்பு பேரணி

அரசாங்கத்தை கவிழ்க்க மக்களை அணிதிரட்ட தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எனினும் அரசாங்கத்தை கவிழ்ப்பது மட்டும் போதாது என்றும் தெரிவித்தார்.

கடந்த 70 ஆண்டு கால ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்களை மையமாகக் கொண்ட ஆட்சியை பொதுமக்கள் உருவாக்க வேண்டும். நிலவும் பொருளாதார நெருக்கடியால் சமூகத்தின் அனைத்து துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவு, எரிபொருள் விலை உயர்வு காரணமாக நாட்டின் பொருளாதாரம் பலவீனமடைந்து உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

# கேஸுக்காக வெயிலில் வாடும் பொதுமக்கள்

வாழைச்சேனை பொலிஸ் நிலைய சந்தியில் லிட்ரோ எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள நேற்று (20) அதிகாலை முதல் மதியம் வரை நுகர்வோர்கள் கடும் வெயிலில் காத்துக் கிடப்பதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: எச்.எம்.எம். பர்ஸான்)







# அரசாங்கத்தை வெளியேற்றத் தயார்

அரசாங்கத்தை வெளியேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக தெரிவிக்கும் அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, நாட்டு மக்களை அரசாங்கம் பலிகொடுப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகிறது. பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டில் கறுப்பு சந்தைகள் பிரபலமடைந்து வருகின்றன. எரிபொருள் விலை பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில், பால்மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெலிபென்ன பிரதேசத்தில் 37 வயதுடைய தந்தை ஒருவர், தனது மகன் பட்டினியில் இருப்பதை தாங்கிக் கொள்ள முடியாது தற்கொலை செய்துகொண்டுள்ளார். மண்ணெண்ணையை பெற்றுக்கொள்ள வரிசையில் நின்றிருந்த 71 வயதுடைய தந்தை உயிரிழந்துள்ளார். நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு நாட்டு மக்களின் உயிர்களைப் அரசாங்கம் பலிகொடுத்து வருகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையை வைத்துப் பார்க்கும்போது, அவருக்கு நாட்டின் பொருளாதாரத்தின் ஆழம், அகலம் தொடர்பில் எதுவும் தெரியாது என்பது புலனாகிறது. நாட்டு மக்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் பொறுப்புக்கூறுவதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை.



**“ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், அவருக்கு நாட்டின் பொருளாதாரத்தின் ஆழம், அகலம் தொடர்பில் எதுவும் தெரியாது என்பது புலனாகிறது. நாட்டு மக்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் பொறுப்புக்கூறுவதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை**

தற்போதைய அரசாங்கத்தை வெளியேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது. ஆனால், அரசாங்கத்தை வெளியேற்றுவது மாத்திரம் போதாது. அரசாங்கத்துக்கு எதிராக நுகேகொடையில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாகவும், நாளை மறுதினம் (23) நடைபெறும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

# எரிபொருள் வரிசைக்கு இவ்வாரம் முடிவு

எரிபொருள் வரிசைகள் இவ்வாரம் முடிவுக்கு வருமென தெரிவிக்கும் அமைச்சர் காமினி லொக்குகே, அதிகளவில் எரிபொருளை மக்கள் பெற்றுக்கொள்வதே எரிபொருள் தட்டுப்பாட்டுக்குக் காரணமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொழும்பில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் பவுசர்கள் ஊடாக நேற்று (19) விநியோகிக்கப்பட்டன. இன்றும் (20) விநியோகிக்கப்படும். இதனால் எரிபொருள் வரிசைகள் குறையும்.

நாட்டில் எரிபொருள் வரிசைகளுக்குக் காரணம் எரிபொருள் விநியோகத்தை விட, எரிபொருளை பெற்றுக்கொள்ளும் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையேயாகும். எரிபொருளை வாகனங்களுக்கு நிரப்பிக்கொள்வதைவிட பெரல்களிலேயே அதிகளவில் நிரப்பிக்கொள்கிறார்கள்.



இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இவ்வார இறுதியில் எரிபொருளை ஏற்றிக்கொண்டு, மற்றொரு கப்பலும் வரவிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை வரும் இக்கப்பலில் இருந்து அன்றைய தினமே எரிபொருளை இறக்க முடிந்தால், கொலன்னாவையில் உள்ள எரிபொருள் களஞ்சியசாலைக்கு அதனை அனுப்பி, ஏனைய மாவட்டங்களிலும் எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும்.

நாட்டில் காணப்படும் எரிபொருள் பிரச்சினை இவ்வாரம் முடிவுக்கு வரும். எவ்வளவு பெரிய வரிசைகள் காணப்பட்டாலும் அவர்களுக்கு எரிபொருளை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

### ஐந்து பாய்மரக் கப்பல்கள்

# இலங்கை வருகை

நட்புறவு பாலங்களை கட்டியெழுப்பும் இந்திய கடற்படையின் பெரு முயற்சியின் தொடர்ச்சியாக, 2022 மார்ச் 10ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையில் இந்திய கடற்படையைச் சேர்ந்த 5 பாய்மரக்கப்பல்கள் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தன.

சுதேசிய முறையிலான இப்பாய்மரக் கப்பல்களில் ‘மாதே’, ‘தரிணி’, ‘புள்புல்’, ‘கடல்புறா’, ‘ஹரியால்’ உள்ளிட்டவை அடங்குகின்றன. இலங்கை கடற்படைக்கு சமுத்திரத்தில் பாய்மரக் கப்பலோட்டும் பயிற்சிகள், அனுபவங்களை வழங்கும் நோக்கத்துடன் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. 2022 மார்ச் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் இக்கப்பல்கள் திருகோணமலையில் தரித்து நின்றதுடன் இலங்கை கடற்படையின் பெண் அதிகாரிகள் இருவர் உட்பட 14 அதிகாரிகள் கொழும்பில் கப்பலோட்ட பயிற்சிகளுக்காக இணைந்துள்ளனர். அத்துடன் கப்பல்கள் துறைமுகத்தில் தரித்து நிற்கும் நிலையில், இந்திய கடற்படை அதிகாரி ஒருவரால் இலங்கை கடற்படையினருக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இரண்டு நாடுகளின் கடற்படையினருக்கும் இடையில் அண்மைய காலங்களில் காணப்படும் நெருக்கமான ஈடுபாடுகள், மிகவும் ஆழமாக வேரூன்றி காணப்படும் நட்புறவுக்கு மேலும் வலுவூட்டியிருக்கும் அதேவேளை இடையறாத இயங்கு திறனையும் உருவாக்கியுள்ளது. இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கைக்கு அமைவாக, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் மிகவும் நெருக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஒன்றிணைவு ஆகியவற்றின் குறியீடாக, இந்திய கடற்படை கப்பல்களின் விஜயம் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# முஸ்லிம்கள் அஞ்சி ஒதுங்கி இருக்கமாட்டார்கள்

■ எம்.சி. அன்சார்

நாட்டினுடைய பொருளாதார நெருக்கடியால், நாட்டு மக்களை படுபாதாளத்துக்குள் அரசாங்கம் தள்ளியுள்ளதாக தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், நாட்டு மக்களின் சாபத்தைப் பெற்ற அரசாங்கமாக இது இருக்கிறது. ‘வீட்டுக்குப் போங்கள்’ என்று சொல்லுமளவுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் மாறியுள்ளனர் என்றார்.



சம்மாந்துறை முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளைஞர் ஒன்று கூடல் நேற்று முன்தினம் (19) சம்மாந்துறை அப்துல் மஜீட் நகர மண்டபவத்தில் அதன் தலைவர் ஹாதிக் இப்றாஹிம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இன்றைய ஆட்சியாளர்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று பிச்சை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் இந்தியா ஒரு பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இது இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடிந்து விடும். அதற்கு பிறகு எந்த நாட்டில் போய் வாங்குவது. மீண்டும் இவ்வாறான நெருக்கடி ஏற்படும். இவ்வாறான நிலைமை கடந்த காலங்களில் கிரேக்கத்திலும், லெபனான் போன்ற நாடுகளில் ஏற்பட்டிருந்தன.

அந்த நாடுகளில் அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சியை அமைத்தாலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தன. அவ்வாறான நிலைமைதான் எமது நாட்டுக்கும் ஏற்படப்போகின்றது. நாங்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கான எவ்வித அவசரமும் தேவையில்லை. கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கதறக்கதற எரித்த சாபத்தையே இந்த ஆட்சியாளர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

தாங்கள் ஆட்டம் காணும்போதெல்லாம் அரசாங்கத்தை நிலைநிறுத்த ஒரேயோர் ஆயுதமாக, இடி இடிக்கும் போது இரும்பைத் தூக்கி போடுகின்ற மாதிரி, முஸ்லிம்களின் மீது பல்வேறு சதிகளை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கு அஞ்சி ஒடுங்கி இனியும் பயந்துபோய் மூலையில் இருக்கின்ற சமூகமாக முஸ்லிம் இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கம் அதனுடைய வீரியம் போய் விட்டதாக சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

# தியாகம் செய்ய என்ன இருக்கிறது?

உரிய நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுக்கத் தவறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவே, நாட்டின் நெருக்கடி நிலைமைகளைத் தோற்றுவித்தவரென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் பாரிய டொலர் தட்டுப்பாடு காணப்படுகிற நிலையில், அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதி அதிகரித்தாகவும், இலங்கைக்கு எரிவாயுவை ஏற்றிவந்த இரு கப்பல்களுக்கு செலுத்த வேண்டிய டொலர் இல்லாததால், நாளாந்தம் 18,000 டொலர்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உணவுக்கு வழியின்றி பட்டினியில் இருக்கும் மக்களை, மேலும் தியாகம் செய்ய வேண்டும் என ஜனாதிபதி கேட்டுள்ளார். இதற்கு மேல் நாட்டு மக்களால் எதனை தியாகம் செய்ய முடியுமென ஜனாதிபதி கூற வேண்டும் என்றார்.



# “மீன்பிடிக்கப் பார்க்கிறார் சஜித்”

நாட்டு மக்களின் வேதனைகளைப் பயன்படுத்தி, தனது ஜனாதிபதி கனவை சஜித் பிரேமதாஸ நிறைவேற்றிக்கொள்ளப் பார்ப்பதாக தெரிவிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கப் பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டை நிர்வகிப்பதற்கான அரசாங்கமொன்றை உருவாக்கி, மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கிறது. ஆனால், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டு மக்களின் வேதனைகளைப் பயன்படுத்தி, தனது ஜனாதிபதி கனவை நனவாக்கப் பார்க்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் நிலைமைகள்

**“ நாட்டை நிர்வகிப்பதற்கான அரசாங்கமொன்றை உருவாக்கி, மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கிறது. ஆனால், சஜித் பிரேமதாஸ, நாட்டு மக்களின் வேதனைகளைப் பயன்படுத்தி, தனது ஜனாதிபதி கனவை நனவாக்கப் பார்க்கிறார்**

மோசமடைந்தாலும் சஜித் பிரேமதாஸவும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் அவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தார். ஹம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனை செய்யப்படும்போதும், மத்திய வங்கியில் ஊழல் மோசடி நடைபெறும்போது அரசாங்கத்தில் சஜித் இருந்தார். இப்போது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.



# விலைகளை அதிகரிக்க மாட்டோம்

மில்கோ நிறுவனத்தின் உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படாதென அந்நிறுவனத்தின் தலைவர் ரேனுக பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மில்கோ நிறுவனம் ஏப்ரல் முதலாம் திகதி முதல் பால்மாவை சந்தைகளுக்கு விநியோகிக்கப்பதற்கு எதிர்பார்த்துள்ளது. நாட்டில் பால்மாக்களின் விலைகள் அதிகரித்திருந்தாலும், மில்கோ நிறுவனம் விலை அதிகரிப்புகளை செய்யப்போவதில்லை.

நாளாந்தம், பால் பக்கட்டுக்களை வீடுகளுக்கு விநியோகிப்பதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.


## அட்டோனித் தத்துவத்தை ரத்துச்செய்தல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இல. 187A, ரோயல் கோர்ட், கொஸ்வத்த வீதி, ராஜகிரிய எனும் முகவரியில் வசிக்கும் குருகுலசூரிய பாத்திமா நிலந்தி பெரேரா எனும் பெர்னாண்டோ (தே.அ.அ.இல 487650471V) ஆகிய நான் பாகொட வீதி நுகேகொடயில் இலக்கம் 85/15 இல் வசிக்கும் குருகுலசூரிய கலிசன்க்டஸ் நாலக்க பெர்னாண்டோ (தே.அ.அ.இல 462401523V) மற்றும் அல்லது இல. 43C, கலல்கொட வீதி, கலல்கொட, பன்னிபிட்டிய இல் வசிக்கும் குருகுலசூரிய புரொஸ்பெரின் நிரன்ஜனி கடவத ஆரச்சி எனும் பெர்னாண்டோ ஆகியோரும் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ஆட்டிகலகே குமாரி அன்னே மொய்ரா தஸ்ஸநாயக்க என்பவரினால் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1882 உடைய விஷேட அட்டோனித் தத்துவத்தின் மூலம் வழங்கிய அட்டோனி அதிகாரத்தை 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் ரத்துச்செய்து மீளப் பெற்றுக்கொள்கின்றேன் என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் இவர்களது பெயரில் மேற்கொள்ளும் எத்தகைய செயற்பாடுகள் தொடர்பாகவும் தான் பொறுப்பேற்பதில்லை என்பதனை இத்தால் அறிவித்துக்கொள்கிறேன். (கொழும்பு தலைமைப் பதிவாளர் அலுவலகம் நாளேட்டு இல 3187 தொகுதி 09 பக்கம் 55 இல் அட்டோனித் தத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது).

குருகுலசூரிய பாத்திமா நிலந்தி பெரேரா எனும் பெர்னாண்டோ

## கொழும்பு நகரில் இயற்கையுடன் கூடிய உங்கள் வீட்டை சொந்தமாக்குங்கள்

32.4 பேர்ச காணியில் 3 படுக்கையறைகள், 2 குளியலறைகள், 3000 சதுர அடியுடன் சகல வசதிளுடன் கூடிய வீடு கொழும்பு 15 இல் விற்பனைக்கு உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு : 0777 362600**

cdanansooriya@gmail.com

காங்கேசன்துறை

## சீமெந்து தொழிற்சாலையை பிரதமர் பார்வையிட்டார்

என்ராஜ்



யுத்தம் காரணமாக மூடப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று (20) காலை கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, 1950ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1990ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக மூடப்பட்டது.

இத்தொழிற்சாலை 728 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தாலும், தற்போது அதன் பெரும்பாலான பகுதிகள் குடியிருப்புகளாக மாறியுள்ளன.

2021 பெப்ரவரி 08ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய, எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பயன்படுத்தக்கூடிய கட்டடங்களை தவிர, ஏனைய கட்டடங்களை இடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும், 80 சதவீதமான கட்டடங்களை புனரமைத்துப் பயன்படுத்த முடியுமென இந்தக் கண்காணிப்பு விஜயத்தின் போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை புனரமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

பிரதமரின் இந்தக் கண்காணிப்பு விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏகநாயக்க ஆகியோரும் உடனிருந்தனர்.

"தற்போதைய ஆட்சியாளர்களுக்கு

# தண்டனை கிடைத்துள்ளது"

ஏ.எல்.எம்.ஷினாஸ்



மின் துண்டிப்பு எனும் பெயரில் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இறை தண்டனை கிடைத்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கவிடாமல், பலாத்காரமாக எரித்ததன் சாபத்தை, இவர்கள் இன்று அனுபவிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் (19) நடைபெற்ற 'ரிஷாத் பதியுதீன் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி'யின் பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இன்று நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. ஆட்சியாளர்களுக்கு வாக்களித்த 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

"ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து, 'நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்' என்று மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

"நேற்று முன்தினம் ஒரு கட்சி, நேற்று வேறொரு கட்சி, நாளை ஒரு கட்சி என உலகத்தில் எந்த ஜனாதிபதிக்கும் நடக்காத விடயம், நமது நாட்டில் நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

"இளைஞர் சமூகத்தை குறிவைத்து, அவர்களை அதல பாதாளத்துக்குத் தள்ளிவிடும் போதை வஸ்துப் பாவனை, எமது சமூகத்தில் வேகமாக ஊடுருவி வருக்கிறது.

"எனவே, நமது இளைஞர்களை விளையாட்டு கழகங்கள் உடைய பிரதிநிதிகள் வழி நடத்த வேண்டும். அவர்களுக்கு விழிப்பூட்டல் செய்யவேண்டும். சமூகத்தில் பலம் வாய்ந்த சக்தியாக இளைஞர் சமூகம் மாற வேண்டும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கில் இருந்து

# பனங்கள்ளு ஏற்றுமதி

எஸ். தில்லைநாதன்



வடக்கில் இருந்து பனங்கள்ளு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர், யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகத்துறை சம்பந்தமான கலந்துரையாடலின்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போதைய சூழ்நிலையில், வர்த்தகத்துறை அமைச்சானது, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து ஏற்றுமதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

"அதன் ஓர் அங்கமாக பனங்கள்ளு உற்பத்திக் கிராமம், பனங்கட்டி உற்பத்தி கிராமம், கடலட்டை உற்பத்தி கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் ஏதாவது எமது அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்கத் தயார். தற்போது நமது நாட்டுக்கு ஏற்றுமதி கட்டாயம் தேவையானது.

"குறிப்பாக, நுவரெலியாவில் கோப்பி, தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வடக்கில் இருந்து ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது. எனவே, வடக்கில் இருந்து பனங்கள்ளைத் தயார் செய்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம்" என்றார்.





எஸ்.ரி.எப் பாதுகாப்பில்

## சிலிண்டர்கள் விநியோகம்

பாறுக் ஷிஹான்

நாடு பூராகவும் தட்டுப்பாடாக இருந்த லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள், விசேட அதிரடிப்படை (எஸ்.ரி.எப்) மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் அம்பாறை மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் நற்பிட்டிமுனை லிட்ரோ எரிவாயு விநியோக நிலைய மொத்த விற்பனை நிலையத்துக்கு நேற்று முன்தினம் (19) எடுத்து வரப்பட்ட சுமார் 1,000க்கும் அதிகமான சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, காரைதீவு, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வருகை தந்த பொதுமக்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன்போது எரிவாயுவை கொள்வனவுக்காக காத்திருந்த சிலருக்கு அது கிடைக்காமையால் அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும், எரிவாயு நிறுவன அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் 10க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நிலைமையை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

'ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி'

## நூல் வெளியீடு

மருதமுனை ஊடகவியலாளர் ராசிக் நபாயிஸ் எழுதிய 'ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி' எனும் கட்டுரை தொகுப்பு நூல் வெளியீடு, கலாநிதி பிர்தௌஸ் சத்தார் தலைமையில், மருதமுனை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) ( நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வை மருதமுனை ஆவணக் காப்பகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது நினைவுச்சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி நூலாசிரியர் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வின் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி கலந்து கொண்டதுடன், நூல் பற்றிய ஆய்வுரையை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் நிகழ்த்தினார்.

விசேட அதிதிகளாக நூலாசிரியரின் தந்தை ஓய்வு நிலை அதிபர் ஏ.ஆர். அப்துல் றாசிக், பிரதிப் பணிப்பாளர் (பிறை வானொலி) பஷீர் அப்துல் கையூம், ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் கவிஞர் மருதமுனை ஹஸன், அம்பாறை மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் எம்.பி. சம்சுதீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ. காதர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பி.எம்.எம்.ஏ. காதர், ஏ.எல்.எம். ஷினாஸ், பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்

அதீத ஹெரோய்ன் பாவனை

## இளைஞன் உயிரிழப்பு

எம்.றொசாந்த்

ஹெரோய்ன் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக்கொண்ட யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த 28 வயது இளைஞன், நேற்று முன்தினம் (19) அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

இளைஞன், கடந்த நான்கு ஆண்டுகளாக போதைப்பொருளுக்கு அடிமையாக இருந்து வந்துள்ளார். அதனால் அவரை மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்ப பெற்றோர் முயற்சித்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவ தினத்தன்று ஹெரோய்ன் போதைப்பொருளை அதீதமாக பாவனைக்கு எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்த இளைஞன், நெஞ்சைப் பொத்தியவாறு நிலத்தில் சரிந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் உயிரிழப்புக்கு அதீத ஹெரோய்ன் போதைப்பொருளே காரணம் என உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட தெல்லிப்பழை கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயது இளைஞன் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்தார்.



மதுபானசாலைக்கு

## அனுமதி வேண்டாம்

### மகஜர் கையளிப்பு

எஸ்.தில்லைநாதன்

மதுபானசாலை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரி, பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

நகர் பகுதியில் சிவன் கோவிலுக்கு முன்பாக இவ்வளவு காலமும் இயங்கிவந்த மதுபானசாலை புதிய இடம் ஒன்றுக்கு மாற்றப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

எனவே, புதிய சூழலிலும் இரண்டு கோவில்கள், தபாலகம், பாடசாலை, குடிமனைகள் உள்ளதால் அதற்கு அனுமதி வழங்குவதை தடை செய்யுமாறு, அப்பகுதியில் உள்ள வைரவர், முருகன் கோவில்களின் பரிபாலன சபையினரால் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பருத்தித்துறை நகர் பகுதியில் சிவன் கோவிலுக்கு முன்பாக குறித்த மதுபான சாலை தொடர்ந்தும் இயங்குவதற்கு பருத்தித்துறை நகரசபை நடப்பாண்டுக்கான அனுமதியை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



வவுனியாவில்

## 5,885 ஹெக்டயரில் சிறுபோகம்

க.அகரன்

இம்முறை வவுனியா மாவட்டத்தில் 5,885 ஹெக்டயரில் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், தற்போது வரை 2,000 ஹெக்டயர் வரை நெற் செய்கை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெரும்போக நெற்செய்கையின் போது இரசாயன உரம், கிருமிநாசினிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் சிறந்த விளைச்சல் இன்மையால் விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளான நிலையில் தற்போது சிறுபோக நெற் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சேதன பசளையை பயன்படுத்தி சிறுபோக செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோடியக்கரையில்

## கரையொதுங்கிய ஆளில்லா படகு

### சுங்கத் துறையினர் விசாரணை

லேம்பர்ட்



தமிழ்நாடு, நாகை மாவட்டம், வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் காத்தான் ஓடை என்ற கடற்கரை பகுதியில் இலங்கையைச் சேர்ந்த கண்ணாடி இழை படகு நேற்று (20) காலை கரையொதுங்கியுள்ளது.

மீனவர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைவாக, கோடியக்கரை சுங்கத்துறை அதிகாரிகள், OFRP-A-0851 KCH என்ற இலக்கம் உடைய குறித்த படகை கைப்பற்றியுள்ளனர்.

இப்படகு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த படகா அல்லது கடத்தல் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் படகா, இதில் யாரும் வந்தனரா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுங்கத்துறை அதிகாரிகள், கியூ பிராஞ்ச் பொலிஸார், கடலோரப் பாதுகாப்பு குழுவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வீட்டுக்கு வரும் தடுப்பூசி சேவை

எம்.எஸ்.எம்.ஹனீபா



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இதுவரை எவ்வித கொரோனா தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நடமாடும் சேவை ஊடாக தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (20) தெரிவித்தார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார அதிகாரிகள் வீடு, வீடாகச் சென்று, இதுவரை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. அதேவேளை, வெளிநாடு செல்பவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

கிழக்கு ஆசிரியர்களை

# கிழக்கிலேயே நியமிக்கவும்

எம்.எஸ்.எம். ஹனீபா

தற்போது வழங்கப்படவுள்ள கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்களில், கிழக்கு மாகாண கல்விக் கல்லூரி ஆசிரியர்களை, கிழக்கு மாகாணத்துக்கே நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், நேற்று (20) தெரிவித்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"நாட்டிலுள்ள கல்விக் கல்லூரிகளில் பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

"மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

"இந்த நிலையில், தற்போது வழங்கப்படுகின்ற கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலின் மூலம் இதனை அறிந்து கொள்ள முடிகின்றது."

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

பதுளை, உடுவரை கீழ்ப் பிரிவு தமிழ் வித்தியாலயத்தில், வரதராஜா சவித்யா - 157, பிரேமசந்ர தனுக துஷார - 161, பிரபாகரன் சோபிதா - 157 ஆகிய மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர். மாணவர்களுடன் அதிபர் வி.பி. பொன்னம்பலம், வகுப்பாசிரியைகளான சந்திரிகா ராஜேஷ்வரன், தமிழ்வாணி இன்பராஜ் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.





பண்டாரவளை, பள்ளகட்டுவ இந்துகல தமிழ் வித்தியாலயத்தின் மாணவி ரிமாஷினி 155 புள்ளிகளை பெற்று, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவருக்கு கற்பித்த ஆசிரியை டி.ஜெகதீபா, அதிபர் எம்.ஆசைத்தம்பி ஆகியோருக்கு பெற்றோர் நன்றி தெரிவித்துக்கொள்கின்றனர்.

பது/ கலப்பிட்டகந்த தமிழ் மகா வித்தியாலயத்தின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவ மாணவிகளான ச. மிஷோத் மதுகேசன் - 157, ஸ்ரீ திருக்குமரன் - 150, ஸ்ரீ லித்யா சியோமி - 150, சி. தக்ஷிகா - 150 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளனர். மாணவர்களுடன் அதிபர் திருமதி ரஞ்சனி இந்திரா, உபஅதிபர் லூகாஸ், ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் திருமதி சகுந்தலா தேவி, வகுப்பாசிரியர் செ. நவரட்ணராஜா ராஜா ஆகியோரை படங்களில் காணலாம்




இந்தியா எமது நண்பன் என்பதை

# மறந்துவிடக்கூடாது

## இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவிப்பு

இலங்கைக்கு எப்போதெல்லாம் பிரச்சினைகள் ஏற்பட்டதோ, அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா எமக்குக் கை கொடுத்திருக்கின்றது என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், விசேடமாக மோடி பிரதமராக பதவியேற்ற பின்பு, இலங்கை தொடர்பில் அவர் அதிக கவனம் செலுத்தி வருகின்றார் என்றார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பக்கத்தில் இருக்கின்ற எங்களுடைய அண்டைய நாடான இந்தியாவை விட்டு விட்டு, எங்கோ இருக்கின்ற சீனர்களை ஆதரிக்கின்றோம். அவர்கள் எங்களுடைய நாட்டின் அனைத்து வளங்களையும் கொள்ளையடிக்க காத்திருக்கின்ற ஒரு கூட்டம்.

இந்தியாவும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. பௌத்த மதம் இந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்தது. அதேபோல எங்களுடைய தொப்புள் கொடி உறவுகள் அங்கே எமக்காக குரல் கொடுக்கின்றார்கள். எங்களுடைய கலை, கலாசாரம், பண்பாடு என்பன இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக பயணிக்கின்றது.

மோடி அரசாங்கத்துடன் நாம் இணைந்து பயணித்தால், நிச்சயமாக எதிர்காலத்தில் பல நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதே போல இலங்கை நாட்டுக்கு பிரதமர் மோடி விஜயம் செய்யவிருப்பது, பாரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எனவே, இவ்வாறான ஒரு நிலைமையில், நாங்கள் இந்தியாவை அரவணைக்க வேண்டும். கடந்த காலங்களில் இந்திய நாட்டு முதலீட்டாளர்களுக்கு எதிராக போராட்டம் செய்யப்பட்டது. அதனால் நாம் பெற்றுக் கொண்ட நன்மை ஒன்றுமில்லை. ஆனால், சீனா இந்த நாட்டில் என்ன செய்தாலும் கண்ணை மூடிக் கொண்டு அதனை ஆதரிப்பதற்கு தயாராக இருக்கின்றோம் என்றார்.









# அன்பளிப்பு....

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ், கொத்மலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட டன்சினன், சீன் தோட்டம், சொய்ஸி, பெயார்லெண்ட்ஸ் உள்ளிட்ட பல தோட்டங்களின் விளையாட்டு கழகங்கள், மரணசங்கங்கள், கிராம அபிவிருத்தி குழுக்கள் என்பவற்றுக்கான கூடாரங்கள், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்டவை வழங்கி வைக்கப்பட்டன. (துவரகஷான்)

# நகர மத்தியில் கழிவுகளை எரிப்பது யார்?

## இரு தரப்பினர் மீது குற்றச்சாட்டு

■ ரஞ்சித் ராஜபக்ஷ




ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் பணியாளர்களால், ஹட்டன் நகரில் சேகரிக்கப்படும் கழிவுகள், ஹட்டன் நட்சத்திர சதுக்கப் பகுதிக்கு அருகிலுள்ள ஞாயிறு சந்தை வளாகத்தில் எரிக்கப்படுவதால், பிரதேசவாசிகள் கடும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள், பஸ் தரப்பிடத்துக்கு வரும் பயணிகள் உள்ளிட்டவர்களும் பாரிய சுவாசப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஹட்டன்- டிக்கோயா நகர சபை பணியாளர்களால் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட குப்பைகள், குறித்த சந்தை வளாகத்துக்கு கொண்டு வரப்பட்டு, எரிக்கப்படுவதாக அங்கிருக்கும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தக் கழிவுகள் எரியூட்டப்பட்டு, அதிலிருந்து வெளிவரும் புகை பிரதேசமெங்கும் பரவுவதால், அனைவரும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் சுகாதாரப் பிரிவினரிடம் வினவியபோது, ஹட்டன் நகரில் இரவு நேரங்களில் ஓட்டோக்கள் செலுத்தி வருமானம் தேடுபவர்கள், அதிகாலை நேரங்களில் குளிர் காய்வதற்காக, இவ்வாறு கழிவுகளுக்கு தீவைத்து கொளுத்துவதாக குற்றஞ்சுமத்தியதுடன், நகர சபை பணியாளர்களால் குறித்த இடத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள், பின்னர் தரம் பிரிக்கப்பட்டு வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும், பணியாளர்கள் கழிவுகளை தீவைத்து எரிப்பதில்லை என்றும் தெரிவித்தனர்.

மாரடைப்பு காரணமாவே

# வரிசையில் நின்றவர் உயிரிழந்துள்ளார்

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த போது, மயங்கி விழுந்து உயிரிழந்தவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வத்தேகம, உடதலவின்ன பகுதியை சேர்ந்த 71 வயதுடையவரே நேற்று முன்தினம் (19) பகல், மரணமடைந்தார்.

மயங்கி விழுந்தவரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாரடைப்பு காரணமாகவே இவர் உயிரிழந்துள்ளார் என, கண்டி தேசிய வைத்தியசாலையில் நேற்று (20) முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் கடந்த 30 வருடங்களாக இலங்கை பொலிஸில் சிவில் அதிகாரியாக கடமையாற்றியவர் என அவரது சகோதரரான மொஹமட் நிசாம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன்– டிக்கோயா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில்

# அனுமதியற்ற சுற்றுலா விடுதிகள்



■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் எவ்வித பதிவுகளும் அனுமதிகளும் இன்றி, சுற்றுலா ஹோட்டல்கள் நடத்திச் செல்லப்படுவதாகவும் அவ்வாறான ஹோட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் உள்ள சில வீடுகளில் சுற்றுலாப் பயணிகள் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கான உணவும் வழங்கப்படுகின்றது. அவ்வாறான இடங்களில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் பொறுப்பை ஏற்பதற்கு எவரும் முன்வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த, ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன், குறித்த நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் இதுவரை ஒரேயொரு சுற்றுலா ஹோட்டல் மாத்திரமே முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

எனினும், பல இடங்களில் எவ்வித அனுமதியும் பெறாமல் நடத்திச் செல்லப்படும் சுற்றுலா விடுதிகளால் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது என்றார்.

எனவே எவ்வித அனுமதியும் இன்றி நடத்திச் செல்லப்படும் சுற்றுலா விடுதிகள் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கையொன்றை முன்வைக்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

போதைப் பொருள் தேடி

# கண்டிக்கு வந்த இளைஞர்கள் கைது

■ சேஹ்ன் செனவிரத்ன

போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்கள் மூவர், போதைப் பொருளைத் தேடி, அநுராதபுரத்திலிருந்து கண்டிக்கு வந்த போது, கண்டி பொலிஸ் தலைமையக போதை ஒழிப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருளைத் தேடி, ஓட்டோவில் வருகை தந்த குறித்த மூன்று இளைஞர்களும் கண்டி நகரில் சுற்றித் திரிந்த போதே, கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இதன்போது அவர்களிடமிருந்து போதைப் பொருள் பக்கட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் இவர்கள் போதைப் பொருளைத் தேடியே கண்டிக்கு வருகை தந்துள்ளமை, சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார வழிகாட்டல்களின் கீழ்

# வசந்த கால கொண்டாட்டம்

■ டி.சந்ரு



நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில், வசந்த கால கொண்டாட்டத்தை இந்த வருடமும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 30ஆம் திகதி வரை சுகாதார முறைக்கமைய நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக நுவரெலியா மாநகர சபை மேயர் சந்தனலால் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடம் இருந்தும் ஆலோசனைகள் வழங்கப்படுள்ளதுடன், நுவரெலியாவிலுள்ள சகல உணவகங்கள், சுற்றுலா விடுதிகள் என்பவற்றுக்கு இது தொடர்பில் தெளிவுப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

வசந்த கால நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டு உள்ளதாகவும் நுவரெலியா போக்குவரத்து பொலிஸ் பிரிவினரால் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் மாநகர சபை மேயர் மேலும் தெரிவித்தார்.

# நானுஓயாவில் நடமாடும் சேவை

■ டிசந்ரு

நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட ஏழு கிராம சேவகர் பிரிவை சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை, ஆரம்ப கல்வி இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த சில்வா ஏற்பாட்டில், நானுஓயா நாவலர் தமிழ் பாடசாலையில் நடமாடும் சேவை நேற்று முன்தினம் (19) தினம் நடைபெற்றது.

இதன் போது கூப்பன் வழங்காத முதியோர்களுக்கு கூப்பன் பதிவு செய்தல், இறப்பு, பிறப்பு, விவாகச் சான்றிதழ்கள் வழங்குதல், தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுத்தல், பதிவு மேற்கொள்ளுதல், பொலிஸ் முறைப்பாடுகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் கலந்துகொண்டவர்களுக்கு கொரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பரவல் பற்றிய தகவல்கள், புதுவிவரங்கள், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட உதவி செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோர் உட்பட அரச முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



மழையையும் பொருட்படுத்தாது

# நல்லதண்ணியில் குவிந்த யாத்திரிகர்கள்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

வார இறுதி விடுமுறையுடன் ஹட்டன் ஊடாக சிவனொளிபாதமலையை தரிசிப்பதற்கு அதிகமான யாத்திரிகள் வருகைத் தந்தனர்.

குறித்த யாத்திரிகர்கள் வருகைத் தந்த வாகனங்கள் அனைத்தும் நல்லதண்ணி நகரில் அமைக்கப்பட்டுள்ள மஸ்கெலியா பிரதேச சபையின் வாகனத் தரிப்பிடம், தனியார் வாகன தரிப்பிடங்களில் நிறுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக நல்லதண்ணி- மஸ்கெலியா பிரதான வீதியின் இருமருங்கிலும் நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்கும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

# படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு புதிய பாதையைக் கண்டறியவும்

பதுக்கிவைத்து, செயற்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தல், விலையை அதிகரித்தல், வரிசையில் காத்திருக்க வைத்தல் இவ்வாறு, நெருக்கடிகள் நீண்டுகொண்டே செல்கின்றன. இந்தப் பட்டியலுடன், வரிசையில் நிற்குக்கும் போது மரணிக்கும் சம்பவங்களும் சேர்ந்துவிட்டன.

எரிபொருளுக்கான வரிசை, நீண்டு கொண்டே செல்கின்றது. மண்ணெண்ணெய் வாங்குவதற்காக காத்திருந்த 71 வயதான முதியவர், மயங்கி விழுந்து மரணமடைந்த சம்பவம் வத்தேகம, உடதலவின்ன பகுதியில் மார்ச் 19ஆம் திகதி பதிவானது. கடவத்தையைச் சேர்ந்த ஒட்டோ சாரதியான 70 வயதானவர் நேற்று (20) மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

நாட்டின் சிரேஷ்ட பிரஜைகள் இருவரும், இவ்வாறு நடுவீதியில் மரணமடைந்துவிட்டனர். இறுதிக் காலத்தை, வீடுகளில் இருந்து ஓய்வெடுக்க வேண்டியவர்களை, மிகமோசமான நிர்வாகம், நடுவீதிக்கு இழுத்துவந்து, வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

ஏற்கெனவே, சுட்டிக்காட்டியதைப் போல, கட்டுப்பாடு இன்மையால், விலைகள் நாளுக்கு நாள் எகிறிக்கொண்டே போகின்றன. ஒருவேளை உணவாக பால்தேநீரை பருகி, வயிற்றுக்கு ஆதாரம் தேடிக்கொண்டவர்கள், அந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்கமுடியாத அளவுக்கு விலை எகிறி நிற்கின்றது.

இந்த விலை அதிகரிப்புகளை இறுதியானதாக யாரும் நினைத்து விடக்கூடாது. இன்னும் என்னனென்ன பொருட்களுக்கு, விலை அதிகரித்து விட்டிருக்கிறது என்பதை, பொருட்களைக் கொள்வனவு செய்யும் போதுதான் தெரியும். அப்போது, ஒவ்வொருவர் மீதும் மின்சாரம் பாய்ந்தால் போல இருக்கும்.

உள்நாட்டு அரிசி, பால்மா, காஸ், அலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்தி ஆகியவற்றுக்கான கட்டணங்களும் அதிகரித்துவிட்டன. அலைபேசி அழைப்புக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதன் ஊடாக, 'வீட்டில் சமைக்கவில்லை' எனக் கூறுவதற்குக் கூட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆக, புலம்பல்களும் குறைந்துவிடும்.

இதற்கிடையில், சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது, காலம் கடந்த ஞானமாக இருந்தாலும், உருப்படியான தீர்மானங்கள் அம்மாநாட்டில் எடுக்கப்பட வேண்டும். எனினும், ஒருசில கட்சிகள், கால்களை இழுத்துவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்த மாநாட்டில், நெருக்கடிகளுக்கான தீர்வைக் காணும் வழிவகைகள் குறித்து கலந்தாலோசிக்க வேண்டும்.

நெருக்கடிகள் உச்சம் தொட்டுவிட்டன. மக்களால் வாழமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மாற்று ஏற்பாடுகளை நோக்கி நரகமுடியாமல் தவிக்கின்றனர். விலைகள் அதிகரிக்கப்பட்ட போதெல்லாம், மேற்கொள்ள வேண்டிய எல்லா மாற்று ஏற்பாடுகளையும் எடுத்துவிட்டனர். இனியும் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், மூளையும் களைத்துவிட்டது.

வரிசைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இல்லையேல் மயங்கிவிழுந்து மரணிப்போரின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகும். வரிசையில் நிற்போரில் பெரும்பாலானவர்கள் சாப்பிடாமல் வந்திருப்பர். மண்ணெண்ணெய் வாங்கிச்சென்றால் தான், பலரின் வீடுகளில் அடுப்பு எரியும்.

மக்களை வீதியில் நிற்கவிடாமல், சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டும். கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே ஓரளவுக்கேனும் நிவாரணங்களை வழங்கவேண்டும். நெருக்கடிகளுக்குள் மூழ்குவதை விட, அவற்றிலிருந்து கற்ற படிப்பினைகளைக்கொண்டு, புதிய பாதைகளைக் கண்டறியவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

இந்த உலகம் சுறுசுறுப்பும் பரபரப்பும் கலகலப்புமானது. இங்கு சண்டை சச்சரவுகள், சமாதானப் போக்குகள் என எல்லாமே நடக்கும். அநீதி செய்பவர்களும் நீதியைப் பற்றிப் பேசுவார்கள்.

ஆனால், நீங்கள் இவை பற்றி மனக்கிலேசம் அடையத்தேவையில்லை. இவை யதார்த்தமாகிவிட்டன. இந்தத் துன்பங்கள், பிரச்சினைகள் பற்றிய கரிசனை நியாயமானது.

இதற்காக நாங்கள் கலவர உணர்வுடன் வாழமுடியாது. உங்கள் கடமைகளை நீங்கள் முழுமையாகச் செய்தேயாக வேண்டும். பூமி சுழன்று ஓடிக்கொண்டேதான் இருக்கும். நீங்கள் இயங்க, உங்கள் கடமைக்குச் சாவி கொடுத்தபடியே இருப்பீர்களா?

ஏனெனில், தளர்வுநிலை மனிதனைத் தாழ்வுநிலைக்குத் தள்ளிவிடும். எங்கள் கடமைகளை முழு உலகமும் எதிர்பார்க்கின்றது. துன்பங்களையும் சவால்களையும் எவர்தான் சந்திக்காமல் இருக்கிறார்கள்? இவைதான் எம்மை மெருகேற்றுகின்றன.

சுவாரஷ்யமான வாழ்க்கைக்கு துன்பம் தேவைப்படுகின்றது. ஏனெனில், வெற்றி என்றால் என்னவென்று சொல்லி வைக்கின்றது. மனத்தில் மாயைமிகு எண்ணங்களை வைத்திருக்கலாகாது. உலகை உருவாக்க உங்களுக்கும் தகுதியுண்டு.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஜே.வி.பி எனும் இனவாத சக்தி



என்.கே. அஷோக்பரன்

ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான மக்கள் அலை, தினம்தினம் வளர்ந்து கொண்டிருக்கிறது. ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக எழுந்திருக்கும் மக்கள் எதிர்ப்பையும் அதிருப்தியையும், தமக்குச் சாதகமாக்க சஜித் பிரேமதாஸவை முன்னிறுத்தும் ஐக்கிய மக்கள் சக்தியும், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணியும் களத்தில் இறங்கியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, திக்குத் தெரியாத நடுக்கடலில் சிக்கிய, பல கப்டன்களைக் கொண்ட கப்பலைப் போலத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. தான் ஒரு கட்சியா? அல்லது, கூட்டணியா என்ற குழப்பம், ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ள ஆயிரம் பிரச்சினைகளில், ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

ஆகவே, பிரதான எதிர்க்கட்சி வலுவிழந்திருக்கும் போது, அந்த இடத்தைத் தான் எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என ஜே.வி.பி கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறது.

இலங்கை வரலாற்றில், பயங்கரவாதிகள் என்றால், தமிழ் ஆயுதக் குழுக்களை மட்டும் ஞாபகம் கொள்வது இனவாதத்தின் விளைவு. 1987இல் இலங்கை பாராளுமன்றத்துக்குள் குண்டு போட்ட பயங்கரவாதிகள், 'தேசப்பிரேமி ஜனதா வியாபாரய' (தேசபக்தி மக்கள் இயக்கம்) என்ற ஜே.வி.பியின் இராணுவப் பிரிவினர் ஆவர்.

இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்ட முக்கியஸ்தர்கள் பலரை, பலருக்கும் ஞாபகம் இருக்கும், ஆனால், ஜே.வி.பியால் கொலை செய்யப்பட்ட முக்கியஸ்தர்களை பலரும் மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது.

என்ன? ஜே.வி.பி குண்டு போட்டதா? ஜே.வி.பி ஓர் ஆயுதக் குழுவா? ஜே.வி.பி முக்கியஸ்தர்களைக் கொலை செய்ததா போன்ற கேள்விகளை, அநுர குமார திஸாநாயக்கவின் ரசிகர்களாக உருவாகியிருக்கும் புதிய தலைமுறை பூர்சுவா யௌவனர்கள், கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கையின் பெயர்போன தொழிலதிபரும், முன்னணி திரைப்படத் தயாரிப்பாளருமான கனகசபை குணரட்ணம் (கே.ஜி), தொழிலதிபர்களான சண்முகம் சகோதரர்கள், சபீர் ஹூசைன் ஆகியோர் 1989இல் ஜே.வி.பியினரால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜினதாஸ வீரசிங்ஹ, கீர்த்தி அபேவிக்கிரம, ஜீ.வி.எஸ்.டி சில்வா, லயனல் ஜயதிலக்க, அநுர டானியல், மெரில் காரியவசம், டபிள்யூ.எம்.பி.ஜீ. பண்டா, லெஸ்லி ரணகல, தயா சேபாலி சேனாதீர ஆகியோரும், ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்களான ஹர்ஷ அபேவர்தன, நந்தலால் பெர்ணான்டோ, சரத் நாணயக்கார ஆகியோரும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினரான லக்ஷ்மன் சில்வாவும் ஜே.வி.பியால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினரான பி.டீ விமலசேன, இலங்கை தாராளவாதக் கட்சி வேட்பாளர் ஒ. காரியவசம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் களுத்தறை அமைப்பாளர் இந்திரபால அபேவீர, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான எல். டபிள்யூ பண்டித, இலங்கையின் முன்னணி நடிகரும், சந்திரிகா குமாரதுங்கவின் கணவரும், இலங்கை மக்கள் கட்சியின் தலைவருமான விஜய குமாரணதுங்க ஆகியோரும் ஜே.வி.பியால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

> பயங்கரவாதக் கறையை மறைக்க, பேரினவாத முகமூடியை அணிந்து கொண்ட ஜே.வி.பி, அரசியல் நிலைப்புக்காக அந்த முகமூடியைக் கழட்டி, கொஞ்சம் தாராளவாத ஜனநாயக முகமூடியை அணிந்துகொள்ளத் தொடங்கியது

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தரான பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான சண்ட்ரட்ன பட்டுவதவிதான ஆகியோரும் ஜே.வி.பியால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் முதலாவது பெண் பணிப்பாளரான முனைவர் க்ளடிஸ் ஜயவர்தன ஜே.வி.பியால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

மேலும் பல பொலிஸ் அதிகாரிகள், அரச உத்தியோகஸ்தர்கள், தனியார் தொழிற்றுறை உத்தியோகஸ்தர்கள், பெருந்தோட்ட முகாமையாளர்கள், கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என ஜே.வி.பி படுகொலை செய்தவர்களின் பட்டியல் மிக நீண்டது. இதில் வெளிநாட்டவர்களும் உள்ளடக்கம்.

இந்தப் படுகொலை பட்டியலில் பௌத்த பிக்குகளும் விதிவிலக்கல்ல. கொட்டிக்காவத்தே சத்ததிஸ்ஸ தேரோ, வல்லதொட பண்ணதர்ஸி தோரோ, பொஹொத்தரமுல்லே ப்ரேமலோக தேரோ உள்ளிட்ட பௌத்த பிக்குகளும் ஜே.வி.பியினால் படுகொலை செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு உள்ளது.

பல உயிர்களைப் பறித்த இரத்தக்கறை, ஜே.வி.பி மீது படிந்து கிடக்கிறது. இந்த இரத்தக்கறையை மறைக்க வேண்டிய தேவை, ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு 'ஜனநாயக வழி'க்குத் திரும்பிய ஜே.வி.பிக்கு இருந்தது. அதற்காக ஜே.வி.பி எடுத்துக்கொண்ட ஆயுதம் 'பேரினவாதம்'.

ராஜபக்‌ஷர்கள், ஞானசாரர்களுக்கு முன்பதாக, மிகப் பெரிய 'சிங்கள-பௌத்த' பேரினவாத சக்தியாக 1990களின் பிற்பகுதியிலிருந்து தன்னை முன்னிறுத்திச் செயற்பட்ட கட்சி ஜே.வி.பி ஆகும். ஜே.வி.பியின் இந்த இனவாதத்தை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ராஜபக்‌ஷர்களும் தமது அரசியல் நலன்களுக்காக, நன்றாகவே பயன்படுத்தி இருந்தார்கள்.

தன் தாயைக் கொல்ல முயன்ற, தன் கணவரைக் கொன்ற ஜே.வி.பியோடு, அரசியலுக்காக கைகோர்த்த அவலத்தையும் சந்திரிகா புரிந்திருந்தார். அன்று பேரினவாத சக்தியாக இருந்த ஜே.வி.பியின் அரசியல் ஆதரவு அவரது அரசியலுக்கு தேவையாக இருந்தது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு மிக குறைந்தபட்ச தீர்வாக, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கை, வழக்காடிப் பிரித்தது ஜே.வி.பி ஆகும். இந்த 'இனவாத' ஜே.வி.பியில் புடம்போடப்பட்டவர்கள்தான் விமல் வீரவன்ச வகையறாக்கள். தமிழர் விரோத இனவாதத்தை, 1990களின் பின்னர் வளர்த்து விட்டதில், ஜே.வி.பிதான் முதன்மையானதும் முக்கியமானதுமான அரசியல் சக்தியாகும்.

2009ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட யுத்த வெற்றி, மஹிந்த ராஜபக்‌ஷவை 'அடுத்த துட்டகைமுனு' என்ற நிலைக்கு கொண்டு சென்றது. ராஜபக்‌ஷவை மீறியதொரு 'சிங்கள-பௌத்த' பேரினவாத தலைமை உருவாக முடியாது என்ற நிலையில், தன் நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய கட்டாயம் ஜே.வி.பிக்கு ஏற்பட்டது.

பயங்கரவாதக் கறையை மறைக்க, பேரினவாத முகமூடியை அணிந்து கொண்ட ஜே.வி.பி, அரசியல் நிலைப்புக்காக அந்த முகமூடியைக் கழட்டி, கொஞ்சம் தாராளவாத ஜனநாயக முகமூடியை அணிந்துகொள்ளத் தொடங்கியது. அதற்கு உவப்பானதாக, அநுரகுமார திஸாநாயக்கவை தனது தலைவராகவும் ஆக்கிக்கொண்டது.

> ராஜபக்‌ஷர்கள், ஞானசாரர்களுக்கு முன்பதாக, மிகப் பெரிய 'சிங்கள-பௌத்த' பேரினவாத சக்தியாக 1990களின் பிற்பகுதியிலிருந்து தன்னை முன்னிறுத்திச் செயற்பட்ட கட்சி ஜே.வி.பி ஆகும்

ஆனால், ஜே.வி.பி என்ற பெயரும், அதோடு இணைந்த பயங்கரவாத, இனவாத அடையாளமும் தாராளவாத ஜனநாயக முகமூடியை கிழித்துக்கொண்டு நின்றதால், அந்தக் கிழிசல்களை மறைக்க 'தேசிய மக்கள் சக்தி' என்றதொரு புதிய அமைப்பின் பெயரில், புதிய சின்னத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது ஜே.வி.பி. புதிய போத்தலில், பழைய இரத்தக்கறை தோய்ந்த, இனவாத வெறியேறிய அதே கள்தான் என்பதை உணர வேண்டும்.

அது தவறு, அநுர குமார திஸாநாயக்க சரியாகத்தானே பேசுகிறார்; அவர் வித்தியாசனமானவர். அவர் ஜே.வி.பியை மாற்றிவிட்டார் என்று சிலர் வாதிடுவார்கள். அநுர, பேச்சுக்கலை வல்லோன். அவரது சிங்கள மொழிப் பேச்சுகளுக்கு நான் ரசிகன். ஆனால், ஹிட்லரும் பேச்சுக்கலை வல்லோன் என்பதை மறந்துவிடக்கூடாது. பேச்சைக் கேட்பதோடு, செயலையும் அவதானிக்க வேண்டும்.

ஒரு முறையாவது, இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு தீர்வு பற்றி அநுரகுமார திஸாநாயக்க பேசியிருக்கிறாரா. இல்லை! இன்றுள்ள பிரச்சினைகளுக்கான மாற்றுத் தீர்வுகளை அவர் முன்வைத்திருக்கிறாரா? இல்லை! ஆட்சியிலுள்ளவர்களை விமர்சிக்கும், கேள்வி கேட்பதை மட்டுமே அவரது பேச்சுகளினூடாகச் செய்துகொண்டிருக்கிறார். அதனால் ஏற்படும் கவர்ச்சியைப் பயன்படுத்தி, தேர்தல் வெற்றிகளை அடைய எண்ணுகிறார்.

அநுர வித்தியாசமானவராக இருந்தாலும், அவரோடு உள்ளவர்களும், அந்தக் கட்சியும் அதே ஜே.வி.பிதான். அநுர என்ற முகத்தைக் காட்டி, அதே பயங்கரவாத, இனவாத சக்தியான ஜே.வி.பிதான் அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கிறது. வரலாற்றை நாம் மறந்துவிடக்கூடாது. வரலாறு முக்கியம்!

## கடிதங்கள்

### கடற்றொழிலுக்கு செல்வதற்கு டீசல் வழங்கப்படுவதில்லை

மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்வதற்கென போதியளவு டீசல் வழங்கப்படுவதில்லை என மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

திருகோணமலை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல மணிநேரம் காத்திருந்தும் தமது ஜீவனோபாய தொழிலான கடற்றொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் உள்ளதாக, மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

டீசல் பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்கும்போது, கேன்களில் டீசல் வழங்கமுடியாது என எரிபொருள் நிலைய ஊழியர்களால் கூறப்பட்டு விடுகின்றது. சிலபொழுதுகளில் 2,000 ரூபாய்க்கு மாத்திரம் டீசல் வழங்கப்படுகிறது. இவ்வாறு பெறப்பட்ட டீசல் மூலம், கடலில் எவ்வளவு தூரம் சென்று, தமது தொழிலை செய்யமுடியும் என மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது படகுகளின் அனுமதிப்பத்திரத்தைக் காண்பித்தும் தமக்கு போதுமான டீசல் வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசிக்கு மத்தியில், தாங்கள் நிவாரணம் கேட்கவில்லை எனவும் தமது ஜீவனோபாய தொழிலை முன்னெடுத்துச் செய்ய உரிய முறையில் எரிபொருளை வழங்க அல்லது, படகின் அனுமதிப் பத்திரத்துக்கு அமைவாக மீன்பிடி துறைமுகங்களில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலாவது டீசல் பெற்றுத்தர அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

எப். முபாரக்



கொமர்ஷல் வங்கியால் பண்டிகைக்கால பொருள் கொள்வனவு

# வடக்கு, கிழக்கில் ஊக்குவிப்பு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 'கிரடிட்' மற்றும் 'டெபிட்' கார்ட் பாவனையாளர்களுக்கு, 30 சதவீதம் விசேட கழிவை அறிமுகம் செய்துள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் உள்ள 25 வர்த்தக நிறுவனங்களுடன் வங்கி இணைந்துள்ளது. துணி வகைகள், காலணிகள், பைகள் (Bags), வீட்டுப் பாவனைப் பொருள்கள், அன்றாட நாகரிகப் பொருள்கள், உணவகங்களில் இந்தக் கழிவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

'கிரடிட்', 'டெபிட்' அட்டைகள் மீதான இந்தக் கழிவுகள், மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் ஆரம்பமாகியது. கொமர்ஷல் வங்கி இணைந்துள்ள ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் குறிப்பிட்ட தினங்களில் அல்லது குறிப்பிட்ட காலப் பகுதியில் கார்ட் பாவனையாளர்கள் இந்தக் கழிவுகளைப் பெற முடியும். 2022 ஏப்ரல் 25 வரை இந்தக் கழிவுகள் செல்லுபடியாகும் என வங்கி அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கி கார்ட் பாவனையாளர்களுக்கு, கழிவுகளை வழங்க இணங்கியுள்ள குறிப்பிட்ட வர்த்தக நிறுவனங்களில் துணி வகைகள், நவநாகரிகப் பொருட்கள், உதிரிப் பொருட்கள் சில்லறை விற்பனையின் போது கிரடிட் கார்ட்டுகளுக்கு 30 சதவீதம் வரையும் டெபிட் கார்ட்டுகளுக்கு 25 சதவீதம் வரைக்கும் கழிவு வழங்கப்படும். காலணிகள், தோல் உற்பத்திப் பொருட்களுக்கு கிரடிட் கார்ட்டுகளுக்கு 15 சதவீதமும் டெபிட் கார்ட்டுகளுக்கு 10 சதவீதமும் கழிவுகள் வழங்கப்படும். வாழ்வியல் பொருள்களுக்கு கிரடிட் கார்ட்களுக்கு 25 சதவீத கழிவும் டெபிட் கார்ட்களுக்கு 20 சதவீத கழிவும் வழங்கப்படும். உணவகங்களில் கிரடிட் கார்ட்களுக்கு 15 சதவீத கழிவும் டெபிட் கார்ட்களுக்கு பத்து சதவீத கழிவுகளும் வழங்கப்படும்.

அப்துல்லா மென்ஸ் வெயார் (கல்முனை) அருண் டெக்ஸ்டைல்ஸ் அன்ட் பென்ஸி பெலஸ், பரகத் டெக்ஸ், பிலால் எம்போரியம், பிலால் கிட்ஸ், புளுலெகூன், ஈஸ்ட் ஸ்டார் ஹெண்லூம்ஸ், ஈவாஷா கிட்ஸ் வேர்ள்ட், பெஷன் போய்ஸ், இண்டியன் கோர்னர் (காத்தான்குடி), கஜனி ஷு பெலஸ், கட்டியானி டெக்ஸ்டைல்ஸ், குமரன் டெக்ஸ்டைல்ஸ், மெக் புட், மலர் டிரேடர்ஸ், மீமாஸ் (மட்டக்களப்பு திருகோணமலை, வவுனியா) நிலாம், றஹ்மத், ஷு சிற்றி, ஸ்டார் பெஷன், சமர் கிளவ்ட்ஸ், அன்லிமிட் மற்றும் வைட் ஸ்டோன் ஆகிய நிறுவனங்களிலேயே இந்தக் கழிவுச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# Kimaki Adventure Game அறிமுகம்




SLT-MOBITEL, அண்மையில் மொபைல் அடிப்படையிலான adventure game ஆன Kimaki ஐ அறிமுகம் செய்திருந்தது. புதிய உள்ளம்சங்களைக் கொண்டமைந்த இந்த game இனூடாக விளையாடுவோருக்கு அதிகளவு விறுவிறுப்பும், இலவச டேட்டா மற்றும் இதர வியத்தகு பரிசுகளையும் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. இந்த game அறிமுக நிகழ்வு ஸ்ரீ லங்கா டெலிகொம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, இலங்கையின் முன்னணி டிஜிட்டல் முகவர் நிறுவனமான Arimac Lanka (Pvt) Ltd. இன் நிறைவேற்று அதிகாரிகள், SLT-MOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

2020ஆம் ஆண்டில் Adventures of Kimaki முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. தனது குடும்பத்தாரையும் நண்பர்களையும் தேடியறியும் முயற்சியில் அபார சக்தி நிறைந்த கோலின் உதவியுடன் இந்த game வடிவமைக்கப்பட்டிருந்தது. சகல போட்டியாளர்களும் விளையாடக்கூடிய வகையில் பதிவேற்றப்பட்டுள்ளது. SLT-MOBITEL வாடிக்கையாளர்களுக்கு விறுவிறுப்பான டேட்டா அன்பளிப்புகளை வழங்குகின்றது. புதிய மெருகேற்றின் ஊடாக, புதிய நிலைகள் உள்ளடக்கப்பட்டு உள்ளதுடன், போட்டியாளர்களுக்கு பெருமளவு பரிசுகளை வெல்லும் வாய்ப்பையும் புத்துணர்வையும் வழங்குவதாக அமைந்துள்ளது.

ஸ்ரீ லங்கா டெலிகொம் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "2020 செப்டெம்பர் மாதத்தில் விளையாடுவதற்கு இலவசமான hyper-casual adventure game ஆக Kimaki ஐ எமது பங்காளர்களான Arimac Lanka (Pvt) Ltd. உடன் இணைந்து அறிமுகம் செய்திருந்தோம். விளையாட்டுடன், பரிசுகளை வெல்லும் வாய்ப்பையும் வழங்குகின்றது. Kimaki - இரண்டாம் கட்டத்தில் ஆண், பெண் இரு கதாபாத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், அதிகளவு பரிசுகளை வெல்லும் வாய்ப்புகளும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதிகளவு டிஜிட்டல் அம்சங்கள், புத்தாக்கமான சிந்தனைகளுடன் அதிகளவு ஈடுபாடு நிறைந்த Kimaki ஐ எம்மால் அறிமுகம் செய்ய முடிந்துள்ளது. சகல போட்டியாளர்களிடமிருந்தும் இந்த முயற்சிக்குப் பெருமளவு வரவேற்பு கிடைக்கும் என நம்புகின்றேன்" என்றார்.

2021 ஒக்டோபர், நவம்பர் மாத காலப்பகுதியில் இடம்பெற்ற Kimaki Champion Run போட்டியில், வெற்றியீட்டியவர்களுக்கு கவர்ச்சிகரமான அன்பளிப்புப் பொதிகளை இந்த அறிமுக நிகழ்வில் SLT-MOBITEL வழங்கியிருந்தது. போட்டியின் பின்னர் GB வைப்புகளும் வழங்கப்பட்டிருந்தன.

மெருகேற்றப்பட்டுள்ள இந்த Kimaki இல் சாகசங்கள், சவால்கள், game play, leader boards போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை புதிய ஆண், பெண் கதாபாத்திரங்களுடன் அதிகளவு விறுவிறுப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. புதிய Kimaki assets களும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் பொருட்கள், ஒலி அமைப்புகள், தேசப்படங்கள் போன்றன அடங்குகின்றன. இவற்றினூடாக பாவனையாளர்களுக்கு சிறந்த 'கேமிங்' அனுபவம் சேர்க்கப்படுகின்றது.

அதிகளவு இரசிகர்களை ஈடுபடுத்தி பெருமளவு விறுவிறுப்பை ஏற்படுத்தும் வகையில், SLT-MOBITEL இனால் SLT-MOBITEL Home கணக்குகளுக்கு இலவச டேட்டா வெற்றியீட்டுவதற்கு, வேகமான தன்னியக்க GB வைப்புகள் வழங்குவது, SLT-MOBITEL இடமிருந்து அதிகளவு டேட்டா அன்பளிப்புகளை வெல்வதற்கான கூப்பன் குறியீடுகள் போன்றனவும் வழங்கப்படுகின்றன.

ஒடிசா

நண்பனைக் காப்பாற்றச் சென்றவர்களில்

# அறுவர் மரணம்

நீரில் மூழ்கிய நண்பர்களை அடுத்தடுத்து காப்பாற்ற சென்ற ஆறு பேர் உயிரிழந்த சம்பவம் ஒடிசாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசாவின் ஜஜ்பூர் நகரில், கரஸ்ரோட்டா ஆற்றில் கடந்த 18 ஆம் திகதி ஹோலி பண்டிகையைக் கொண்டாடி விட்டு, குளிப்பதற்காக நண்பர்கள் சிலர் ஆற்றுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்களில் ஒருவர், திடீரென ஆற்றில் மூழ்கியுள்ள நிலையில் இதைக் கவனித்த அருகில் இருந்த மற்றொருவர், அவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது அவரும் நீரில் மூழ்கி உள்ளார். இதனையடுத்து தங்களுடைய நண்பர்களைக் காப்பாற்றுவதற்காக அடுத்தடுத்துச் சென்ற அனைவரும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.





இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா

# பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற 4 வயதுச் சிறுவன்

திருப்பதியை அடுத்த சித்தூரில், 4 வயதுச் சிறுவன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று போக்குவரத்தை சீர்செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளான்.

பலமனேர் நகரைச் சேர்ந்த சிறுவன், அருகே உள்ள பொலிஸ் நிலையத்திற்கு சென்று, உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் "நான் கல்வி கற்கும் பாலர் பாடசாலை அருகே, போக்குவரத்து நெரிசல் காணப்படுகிறது. இதனால் தயவு செய்து போக்குவரத்தைச் சீர்செய்து தாருங்கள்" என்று கோரிக்கை விடுத்துள்ளான்.

சிறுவனின் செயலால் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்த பொலிஸார், போக்குவரத்தைச் சரி செய்வதாகக் கூறி, சிறுவனை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.



கர்நாடகா

திருமணம் விவகாரம்:

# காதலியை கொளுத்திய காதலன்

"என்னைத் திருமணம் செய்" என்று வலியுறுத்தியதால் காதலி மீது, நபர் ஒருவர் பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொலை செய்த சம்பவம், பெங்களூரில் இடம்பெற்றுள்ளது.



பாகல்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த சிவக்குமார் என்பவரே, தனது காதலியான தானிஷ்வரியைக் கொலை செய்துள்ளார்.

இவர்கள் இருவரும் கல்லூரியில் படிக்கும் காலத்தில் இருந்தே காதலித்து வந்த நிலையில், "என்னைத் திருமணம் செய்துக்கொள்" என்று ரவிக்குமாரிடம் தொடர்ந்து தானிஷ்வரி வலியுறுத்தி வந்திருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சிவகுமார், புதன்கிழமை (16) தானிஷ்வரி மீது பெற்லோலை ஊற்றி தீ வைத்துவிட்டு, தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தானிஷ்வரி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள நிலையில், இது குறித்து வழக்கப் பதிவு செய்த பொலிஸார், தப்பியோடிய சிவகுமாரைத் தேடிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா

மைதானத்துக்குச் சென்றவர்களில்

# 100 க்கும் மேற்பட்டோர் படுகாயம்

கேரள மாநிலம், மலப்புரம், காளிகாவ் நகரில் நடைபெற்ற கால்பந்து போட்டியின் போது, மரக்கட்டைகளால் ஆன இருக்கைகள் திடீரென சரிந்து விழுந்த விபத்தில், மைதானத்தில் இருந்த 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் குறித்த விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மும்பை

பெற்றோரைப் பேணாத பிள்ளைக்கு

# சொத்துரிமை இல்லை

"பெற்றோரைப் பேணாத பிள்ளைக்கு சொத்துரிமை இல்லை" என்ற தீர்ப்பை, மும்பை உயர் நீதிமன்றம் வழக்கொன்றில் வழங்கியுள்ளது.



மும்பையில் பல ஆண்டுகளாக மனச்சோர்வால் கணவன் படுக்கையில் உள்ள நிலையில், தன்னை, அவரது சட்டப்படியான காப்பாளராக அறிவிக்கக் கோரி அவரது மனைவி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

மேலும் மும்பையில் அடுக்குமாடிக் குடியிருப்பில் 2 வீடுகள் சொந்தமாக இருந்தும், தங்கள் மகன், தந்தையைக் கவனிக்கவில்லை என்றும், தானே மருத்துவச் செலவைச் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இவ்வழக்கில் தன்னையும் சேர்த்துக்கொள்ளக் கோரி அவர்களின் மகன் இடையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், இவ் வழக்கை விசாரித்த நீதிபதிகள், தந்தையை ஒருமுறையாவது மருத்துவரிடம் அழைத்துச் சென்றீர்களா? அவரது மருத்துவச் செலவை ஏற்றீர்களா என மகனிடம் வினவியதோடு ஆவணங்களின்படி மருத்துவச் செலவைத் தாயே செய்து வந்ததும், ஒருமுறை கூட மகன் செலவை ஏற்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.


இதனையடுத்து, "தந்தையைப் பேணுவதில் அக்கறை இல்லாத மகனுக்கு அவரது வீடுகளில் எந்த உரிமையும் இல்லை" எனக் கூறி இடையீட்டு மனுவை நிராகரித்தனர்.

இந்தத் தீர்ப்புக்க சமூக வலைத்தளங்களில் மிகுந்த வரவேற்புக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பீகார்

பொலிஸ் அதிகாரியை

# அடித்தே கொன்ற மக்கள்



விசாரணைக்கு அழைத்து சென்ற நபர், பொலிஸ் காவலில் மரணம் அடைந்த நிலையில், ஆவேசத்துக்குள்ளான நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூடி, பொலிஸ் அதிகாரியை அடித்துக் கொன்ற சம்பவம் பீகாரில் இடம்பெற்றுள்ளது.

பீகாரின் மேற்கு சம்பரான் மாவட்டத்தில் அமைந்துள்ளது பால்தர் பொலிஸ் நிலையம். இதில் பொலிஸ் கான்ஸ்டபிளாக ராஜ் மங்கள் ராய் பணியாற்றி வருகின்றார். இந்நிலையில், ஆர்யா நகர் பகுதியை சேர்ந்த அமிர்த யாதவ் (வயது 30) என்பவரை தடைகளை மீறிய குற்றச்சாட்டுக்காக விசாரணை நடத்த வேண்டும் எனக் கூறி பொலிஸார் அண்மையில் அழைத்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் பொலிஸாரின் காவலில் இருந்த போது, அந்நபர் உயிரிழந்துள்ளார். இதையடுத்து அவரது மரணம் குறித்து அறிந்த அப்பகுதி மக்கள், மரக் கட்டைகளையும் இரும்புக் கம்பிகளையும் எடுத்து கொண்டு குறித்த பொலிஸ் நிலையத்திற்கு சென்று தாக்குதலில் ஈடுபட்டனர்.

மேலும், பொலிஸ் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்களையும் அடித்து நொறுக்கினர்.

இத்தாக்குதலில் காயமடைந்த 4 பொலிஸார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் அதில் ராய் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதன்பின் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன்

தொட்டில்களுடன் நடந்த அஞ்சலி;

# சோகத்தில் மக்கள்

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா 24 ஆவது நாளாகத் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றது.

இப் போரில் இதுவரை சுமார் 109 குழந்தைகள் உயிரிழந்திருப்பதாகவும் உக்ரேன் அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

அதேசமயம் சுமார் 847 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 1,399 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.



இந்நிலையில் உயிரிழந்த குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அந்நாட்டின் லிவில் நகரத்தில், குழந்தைகளுக்கான தொட்டில் வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டு மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துருக்கி

## உலகில் மிக பெரிய தொங்கு பாலம்



ஐரோப்பிய மற்றும் ஆசிய நகரங்களை இணைக்கும் வகையில் உலகில் மிகப் பெரிய தொங்கு பாலமொன்று துருக்கியில் அமைக்கப்பட்டுள்ளது.

டார்டனெல்லஸ் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இப் பாலத்தை துருக்கியின் ஜனாதிபதி மற்றும் தென்கொரியா பிரதமர் நேற்றுமுன்தினம் (19) திறந்து வைத்தனர்.

இதற்கிடையில் துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் 1915 கனக்கலே பாலதின் கோபுரங்களுக்கு இடையே 2023 மீற்றர் (6,637 அடி) இடைவெளியுடன் உலகின் மிக பெரிய தொங்கு பாலமாக மாறும் என்று தெரிவித்திருந்தார்.

இப் பாலமானது ஆசியப் பக்கத்தில் உள்ள லாப்செகி நகரத்தையும், ஐரோப்பியா பகுதியில் அமைந்துள்ள கெலிபோலு நகரத்தையும் இணைக்கின்றது. டார்டனெல்லை படகின் மூலமாகக் கடக்க சுமார் 5மணி நேரம் எடுக்கும் எனவும் ஆனால் இப் பாலத்தின் மூலமாக 6 நிமிடங்களில் கடக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பான்

## ரோபோக்களை களமிறக்கும் ஜப்பான்

ஜப்பானில் தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் பிரபல நூடில்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் மனித வடிவம் கொண்ட புட்லி என்ற ரோபோக்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.



ரஷ்யா

புட்டினை விமர்சித்த மொடல் அழகி:

## சூட்கேஸில் இருந்து சடலமாக மீட்பு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சைக்கோ என விமர்சித்த பிரபல மொடல் அழகியொருவர் சூட்கேசில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவைச் சேர்ந்தவர் கிரெட்டா வெட்லர் (Gretta Vedler) என்ற 23 வயதான மொடல் அழகியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு சமூக வலைத்தளத்தில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை 'மனநலம் பாதிக்கப்பட்டவர்' (Psychopath) என கடுமையாக விமர்சனம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கிரெட்டா வெட்லரின் சடலம் கார் ஒன்றின் டிக்கிக்குள் சூட்கேசில் அடைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது. இந்த சம்பவம் ரஷ்யாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக பொலிஸார் அவரது காதலரனான டிமிட்ரி கொரோவிடம் மேற்கொண்ட விசாரணையில் ஒரு திடுக்கிடும் தகவல் வெளியானது.

அதில், 'நான்தான் கிரெட்டா வெட்லரை கழுத்தை நெரித்து கொன்றேன்' என அவர் ஒப்புக்கொண்டதாகவும், சடலத்தை ஒரு சூட்கேசில் அடைத்து வைத்ததாகவும், இறந்தது தெரியக்கூடாது என்பதற்காக அவரின் சமூக வலைதளப்பக்கத்தில் தொடர்ந்து புகைப்படங்களை பதிவிட்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்பெயின்

## ஸ்பெயினில் வலுக்கும் போராட்டம்

ஸ்பெயினில் விலைவாசி உயர்வை கண்டித்தும் அந்நாட்டுப் பிரதமர் பெட்ரோ சன்செஸ் (Pedro Sanchez ) உடனடியாக பதவி விலக வேண்டுமென வலியுறுத்தியும் ஆயிரக் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன் மீதான போரால் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், ஸ்பெயினில் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது.

மேலும் எரிபொருள் விலை உயர்வை கண்டித்து ஸ்பெயின் லாரி ஓட்டுநர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் உணவு உள்ளிட்ட பொருட்கள் விநியோகம் தடைபட்டு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட திடீர் விலைவாசி உயர்வை கண்டித்தே அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இன்று ஆரம்பிக்கிறது மூன்றாவது டெஸ்ட்

# தொடரைக் கைப்பற்றப்போவது பாகிஸ்தானா? அவுஸ்திரேலியா?

பாகிஸ்தான், அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட்டானது, லாகூரில் காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், முதலிரண்டு போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில் இப்போட்டி தீர்மானமிக்கதாக அமையவுள்ளது.

அந்தவகையில், இப்போட்டிக்கான ஆடுகளமே கவனம் பெறுகின்றது. ஏனெனில் முதலிரண்டு போட்டிகளிலும் விக்கெட்டுகளைக் கைப்பற்றுவது மிகக் கடினமானதாகக் காணப்பட்டது.

இந்நிலையில், இரண்டு அணிகளும் இரண்டாவது போட்டியில் விளையாடிய அணியே களமிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.





சர்வதேச கபடி போட்டி நடுவராக

## பங்களாதேஷ் பயணமான முஹம்மட் இஸ்மாத்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

2022 சர்வதேச பங்கபந்து கபடி போட்டிகள் பங்களாதேஷின் டாக்கா நகரில் நடைபெறுகின்ற நிலையில், இப்போட்டிகளுக்கான நடுவர் குழுவில் இலங்கையைச் சேர்ந்த எஸ். முஹம்மட் இஸ்மாத் கடமையாற்றுகிறார்.

இவர் கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி உடற்கல்வி ஆசிரியரும், இலங்கை கபடி கூட்டமைப்பின் "ஏ" பிரிவு நடுவர் மற்றும் பயிற்றுவிப்பாளரும், அம்பாறை மாவட்ட கபடி சங்கத்தின் செயலாளரும், பங்கபந்து சர்வதேச கபடி போட்டிக்கான இலங்கை கபடி அணியின் தொழில்நுட்ப அதிகாரியும், நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழக செயலாளரும் ஆவார்.

எக்ஸலன்ஸ் பாடசாலையின்

## விளையாட்டுப் போட்டி மரதனோட்டப் போட்டி

■ எம்யூஎம் சனூன்

புத்தளம் மதுரங்குளி எக்ஸலன்ஸ் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வான மரதனோட்டப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

மதுரங்குளி போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் கடையாமோட்டை சந்தியிலிருந்து ஆரம்பித்த மரதனோட்டப்போட்டி பாடசாலையில் நிறைவு பெற்றது.

சஹ்ரீலான், செலான், செரண்டிப் ஆகிய மூன்று இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

சஹ்ரீலன், செலான் மற்றும் செரண்டிப் இல்லங்களைச் சேர்ந்த முஹம்மது அஸாம், முஹம்மது பாசித் மற்றும் முஹம்மது நதீர் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இத்தாலிய சீரி தொடர்:

## சமநிலையில் மிலன் பியொரென்டீனா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலனின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அவ்வணிக்கும், பியொரென்டீனாவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை டென்ஸல் டம்பிறைஸ் பெற்றதோடு, பியொரென்டீனா சார்பாகப் பெற்ற கோலை லூகாஸ் பெரைரா பெற்றிருந்தார்.

அந்தவகையில், சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 66 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஏ.சி மிலன் காணப்படுகின்றது. 63 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நாப்போலி காணப்படுவதுடன், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள இன்டர் மிலன் 60 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், ஜுவென்டஸ் 56 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் காணப்படுகின்றது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், பார்படோஸில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் நான்காம் நாள் முடிவில் முன்னிலையில் இங்கிலாந்து காணப்படுகின்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 507/9 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 153, பென் ஸ்டோக்ஸ் 120, கிறிஸ் வோக்ஸ் 41, பென் போக்ஸ் 33, அலெக்ஸ் லீஸ் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: வீராசாமி பெருமாள் 3/126, கேமார் றோச் 2/68, ஜேடன் சியல்ஸ் 1/55, ஜேஸன் ஹோல்டர் 1/76, அல்ஸாரி ஜோசப் 1/109, கிறெய்க் பிறத்வெய்ட் 1/59)

மே. தீவுகள்: 411/10 (துடுப்பாட்டம்: கிறெய்க் பிறத்வெய்ட் 160, ஜேர்மைன் பிளக்வூட் 102, ஷமராஹ் ப்ரூக்ஸ் 39, ஜோஷுவா டா சில்வா 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 3/118, பென் ஸ்டோக்ஸ் 2/65, சஹிப் மஹ்மூட் 2/58, கிறிஸ் வோக்ஸ் 1/51, மத்தியூ பிஷர் 1/67, டான் லோரன்ஸ் 1/21)

இங்கிலாந்து: 40/0

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 21 மார்ச் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.